விலை ரூபா 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 18 புதன்கிழமை (04.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 280

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## சமாதானப் பேச்சிற்கு இணக்கம்

# வலிந்த தாக்குதல்கள் தொடருமானால் சமாதானத்திலிருந்து நிரந்தரமாக விலகல்

## நோர்வேயூடாக புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் வலிந்த தாக்குதலை தொடங்கி தமிழ் மக்கள் மீது இனியும் யுத்தத்தை ஏவினால் சமாதான முயற்சிகளில் இருந்து நிரந்தரமாக விலகவேண்டியதாக இருக்கும் என்று நோர்வேத் தரப்பிடம் தெரிவித்துள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான நோர்வே சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயர் நேற்று சந்தித்துப்பேசினார். இச் சந்திப்பிற்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாவது;

நோர்வே சிறப்புத்தூதுவர் மற்றும் நோர்வேத்தூது வரைக்கொண்ட குழுவினரை (இன்று) சந்தித்து நாங்கள் விரிவாக கலந்துரையாடினோம்.

இன்றுள்ள நிலைமைகள் மற்றும் சர்வதேச கரிசனைகள் பற்றி கூடுதலாகக்கலந்துரையாடப்பட்டது.

நோர்வேத்தரப்பினரின் பயண நோக்கம் இரு தரப்பினரையும் சந்தித்து மோதல்களை நிறுத்த வைக்கவேண்டும் என்பதுதான் ஜோன் ஹான்ஸன் பௌயரின் முயற்சியாக இருக்கிறது.

அந்த முயற்சியின் விளைவாகத்தான் இந்த பயணம். இரு தரப்பும் மோதல்களை நிறுத்தி பேச்சுக்களை நடத்தவேண்டும் என்பதுதான் சர்வதேச சமூகத்தின் கோரிக்கை. இதைத்தான் (03 பக்கம் பார்க்க)

# அரசு-விடுதலைப்புலிகளுக்கிடையில் இம் மாத இறுதியில் சமாதானப் பேச்சு

## ஒஸ்லோவில் நடத்த யோசனை

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் இம் மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒக்டோபர் 28 அல்லது 30 ஆம் திகதியில் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை நாடாளுமன்ற நடவடிக்கைகள் இருப்பதால் ஒக்டோபர் 30 அல்லது நவம்பர் 10 ஆம் திகதி பேச்சுக்களை நடத்தலாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது.இப்பேச்சுக்களை ஒஸ்லோவில் நடத்தவும் யோசனை தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கன் பொலிஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை தாக்குதல்

(மன்னார்)

முருங்கன் பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் 4 பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு பின்புறமாக நேற்று அதிகாலை 2 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து பதில் தாக்குதல் நடத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பதில் தாக்குதலில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஐ.நா.பொதுச் செயலாளராக தென்கொரியாவைச் சேர்ந்தவர் !

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக தென்கொரியாவைச் சேர்ந்த பான் கி மூன் அறிவிக்கப்படவுள்ளார்.



இவ் வருடத்துடன் தற்போதைய பொதுச் செயலாளர் கொபி அனான் பதவி விலகியதும் புதிய செயலாளர் பதவியேற்கவுள்ளார்.

இப் பதவிக்கு போட்டியிட்ட இந்தியாவைச் சேர்ந்த சசிதரூர் போட்டியிலிருந்து விலகியுள்ளார். இரகசிய வாக்கெடுப்பில் சசிதரூரின் ஆதரவு குறைவாகக் காணப்பட்டதால் அவர் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

இவ் வாக்கெடுப்பில் தென்கொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பான்கி மூனுக்கு அதிக ஓட்டுக்கள் கிடைத்துள்ளன. இதனையடுத்து அவர் ஐ.நா.பொதுச் செயலாளராக விரைவில் முறைப்படி அறிவிக்கப்படவுள்ளார். (ச)

## பளை,பூநகரிப் பகுதியில் நேற்று கிபீர்த் தாக்குதல்

(கிளிநொச்சி)

பளை மற்றும் பூநகரிப் பகுதிகளில் நேற்று விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளினால் முகமாலை முன்னரங்கப்பகுதிகளை நோக்கி ஆட்லறித்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதையடுத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகமத்திய நிலையம் தெரிவித்துள்ளது.ஆட்லறித்தாக்குதலை மேற்கொண்ட பளை ,பளை வடக்கு மற்றும் பூநகரிப் பகுதிகளை இலக்குவைத்து கிபீர் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

விமானத் தாக்குதலில் குறிப்பிட்ட பகுதிகள் முற்றாக சேதமடைந்ததாக ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நோர்வே சிறப்புத்தூதுவர் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்த நேரத்தில் வான்படையினர் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத முனையில் திருட்டு கச்சேரி நல்லூர் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் கற்பக விநாயகர் ஆலயச் சூழலில் நேற்று முன்தினமிரவு 5 வீடுகளில் துணிகரத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஏழு பேர் கொண்ட ஆயுதக்குழுவொன்று இச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் போது 15 இலட்சத்திற்குப் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் மின்சாரம் நிறுத்தப்பட்டபோது இத் துணிகரத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

ஆயுதங்களுடன் 7பேர் இத் திருட்டில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)


## எரிபொருள் விநியோக அட்டைக்கு 200 ரூபா பெறுமதியான பெற்றோல்

### இன்று முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையில் பெற்றோல் பெறாத வாகனங்களுக்கு குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்று 200 ரூபாவிற்கு பெற்றோல் வழங்கப்படுமென பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் மானிப்பாய், சங்கானை ,பல நோக்குக்கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாளையே வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த முதலாம் திகதி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம்பெற்ற மஹோற்சவத்தில் சுவாமி வீதியுலா வரும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# ஐ.தே.க.தலைவர் ரணிலுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலை குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இச் சந்திப்பில் ஈடுபட்டனர்.

வடக்குக் கிழக்கு பிரதேச மக்கள் மோதல்களினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளதால் வட பகுதி மக் கள் அனுபவித்து வரும் சொல்லெண்ணாத் துன்பங்கள் என்பன குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் விளக்கியுள்ளனர்.

மூதூர் பிரச்சினைகள் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவருக்கு விளக்கப்பட்டுள்ளது. (ச)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் போராட்டம் தொடர்கிறது

நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நாளாம் நாளாக நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர். யாழ். குடாநாடுமீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும், ஏ-9பாதையைத் திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்குத் தொடங்கிய போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பினர் கறுப்புப் பட்டிகளைக் கைகளில் அணிந்து சபாநாயகர் இருக்கை முன் அமர்ந்தனர்.

ஆனால் சபாநாயகர் லொக்கு பண்டார இதனைப் பற்றி கவலையேதும் படாமல் நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தொடங்கினார்.

கடந்த புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினர்.

அதன்பின்னர் வார இறுதியில் நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறவில்லை. மீண்டும் நாடாளுமன்றக் கூட்டம் தொடங்கியுள்ள நிலையில் தங்களது கோரிக்கை நிறைவேறும் வரை இந்த அறப் போராட்டம் நடைபெறும் என்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## கோதுமை மாவின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலையை பிறிமா நிறுவனம் நேற்று முதல் அதிகரித்துள்ளது. இதற்கமைய ஒரு கிலோகிராமுக்கான மாவின் விலை 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்விலை அதிகரிப்புக்கமைய கோதுமை மாவின் விலை 39 ரூபாவுக்கும் 40 ரூபாவுக்கும் இடைப்பட்டதாக அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களில் கோதுமை மாவின் விலை இரண்டாவது தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இரண்டு தடவைகளுமாக மொத்தம் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச)

# வயோதிப மாதுவைக் கொலை செய்து தங்க நகைகள் அபகரித்த திருடர்கள்

## ஏழாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் வயோதிபப் பெண்மணியை கழுத்து நெரித்து கொலை செய்து நகைகளை திருடர்கள் அபகரித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு ஏழாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியை நடராசா நேசரட்ணம் (வயது-74) என்ற வயோதிபப் பெண்மணியேகொல்லப்பட்டவராவார்.

தனிமையில் வசித்துவந்த குறித்த வயோதிபப் பெண்மணியின் வீட்டிற்குச் சென்ற திருடர்கள் அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்து, கொலை செய்து விட்டு சென்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

நேற்றுக் காலை இவரின் வீட்டிற்கு பால் வழங்கச் சென்ற நபரே கொலை குறித்து அயலவர்களிடம் தெரிவித்துள்ளார். சம்பவ இடத்திற்குச்சென்று மரண விசாரணைகளை நடத்திய மல்லாகம் நீதிபதி சரோஜினி இளங்கோவன் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும்,

இத் திருட்டுச் சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## அமெரிக்க லொட்றி விசா

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் லொட்றி விசாவுக்கான விண்ணப்பங்கள் இணையத்தளம் மூலம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் டிசம்பர் 3 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அனுப்பலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் *www.dvlottery.state.gov* என்ற இணையத்தளம் முகவரியூடாக விண் ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஆண் குழந்தைகளைத் தத்துக் கொடுக்க சாவகச்சேரி நீதிமன்றம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பாதுகாப்பில் உள்ள 2 ஆண் குழந்தைகளை தத்துக் கொடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித் துள்ளது.

இது தொடர்பாக நேர்முகத் தேர்வு எதிர் வரும் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே குழந்தைகளைக் கோரி விண்ணப்பித்துள்ளவர்களுக்கும் மற்றும் குடாநாட்டைச் சேர்ந்த குழந்தைகள் கிடைக்காத வர்களுக்கும் குறித்தநேர்முகத் தேர்வுக்கு அழைக்கவுள்ளதாகவும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஆண் குழந்தைகள், இரண்டு மற்றும் நான்கு மாதங்கள் வயது கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# 93 சிறுவர்கள் ஒப்படைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இணைந்த வயது குறைந்த 93 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி 68 பேர் அவர்களதுபெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஒக்ரோபர் முதலாம் திகதி மேலும் 11 பேர் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தங்களது வீடுகளுக்குத் திரும்ப மறுத்த 15 இளைஞர்கள் கல்வி வள மையத்திடம் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களை யுனிசெவ் மற்றும் அவர்களது பெற்றோர்கள் வந்து சந்திக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# புதைக்கப்பட்டிருந்த சடலம் நேற்று தோண்டி எடுக்கப்பட்டது

கொழும்பு சேதுவத்தைப் பிரதேசத்தில் மர்மமான முறையில் குப்பை குழிக்குள் புதைக்கப்பட்டிருந்த சடலம் ஒன்றை உருக்குலைந்த நிலையில் பொலிஸார் நேற்றுத் தோண்டி எடுத்தனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் அஜித் அனவரத்தினவின் உத்தரவின் பேரில் அச்சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

இச் சடலம் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சேதுவத்தை வாரக்ஹெறாட்டல பிரதேசத்தில் காணாமல் போன இளைஞனின் சடலமாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக கிரான்பாஸ் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

31 வயதான தமிழ் இளைஞனே காணாமல் போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் மூவரைக் கைது செய்வதற்கு இரண்டுபொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ச)

# ஆட்கடத்தல் தொடருமானால் அதற்கு எதிராக மக்கள் அணிதிரள்வர்

## விபரங்களைத் திரட்டும் குழு எச்சரிக்கை

ஆட்கடத்தல்கள் தொடருமானால் அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டவுள்ளதாக காணாமல் போனோர் தொடர்பான விபரங்களைத் திரட்டும் குழு எச்சரித்துள்ளது.

மக்களின் உரிமைகள் மீறப்படுகின்ற நிலையில் தொடர்ந்தும் மௌனம் சாதிக்க முடியாது என குழுவின் பணிப்பாளர் என். ஜனவன் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பாக 24 முறைப்பாடுகள் இதுவரைகிடைத்துள்ளதாக அக் குழு தெரிவிக்கின்றது.

இதில் 11 சம்பவங்கள் தொடர்பாக கொழும்பு மாவட்டத்திலிருந்தும் ஐந்து சம்பவங் கள் தொடர்பாக யாழ்.மாவட்டத்திலிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் காணாமல் போன உறவினர்கள் கலந்து கொண்டு தமது சோகங்களை வெளிப்படுத்தினர். (ச)

# கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி கடத்தல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடாதிபதி பி.பாலசுகுமார் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளினால் அவரின் வீட்டில் இருந்து கடத்தி செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடத்தப்பட்டவர் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்தவர் என்றும் தற்போது மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலய வீதியில் வசித்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. கடத்தப்பட்டவர் விடுதலை செய்யப்பட வேண்டுமானால் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பதவி விலக வேண்டும் என அந்த ஆயுத குழு தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

# ஜே.வி.பி.எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பியின் அரசியல் பீடம் மற்றும் செயற்குழுவிலிருந்து விலகிய நாடாளுமன்ற உறுப்பினர் நந்தனகுலதிலவுக்கு எதிராக அக் கட்சியினால் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

ஜே.வி.பியின் அரசியல்சபையின் பேச்சுக்களின் தகவல்கள் உட்பட கட்சியின் முக்கிய இரகசியங்களை அரசாங்கத்திற்குத் தெரிவித்தமை, ஊடகங்களிற்கு கட்சி தொடர்பான கருத்துக்களை வெளியிட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்த விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

ஜே.வி.பி. தொடர்பாக இதுவரை வெளிவராத தகவல்கள் தான் வெளியிடவுள்ளதாக நந்தன குலத்திலக்க தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளதால் ஒழுக்காற்று விசாரணைகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாகவும் இணையத்தளம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதேவேளை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவை உடனடியாக கைது செய்யவேண்டும் என்று ஐ.தே.க. கோரியுள்ளது. (ச-9)

# பரீட்சை பெறுபேறுகள் இணையத்தளத்தில்

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இன்று நள்ளிரவு முதல் இணையத்தளத்தில் பார்க்கலாம் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. *www.doenets.lk* என்ற இணையத்தளத்தினூடாக பெறுபேறுகளைப்பார்க்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

நம்பிக்கை இன்றி சந்தேகப்பட்டுக்கொண்டால் மாலுமி இல்லாத படகு கடலில் அலைந்து காற்றில் அடிபட்டு அவஸ்தைப்படுவது போல நாமும் கெடுவோம்.

–ராஜாஜி

வலம்புரி

# பௌயரின் நம்பிக்கை வெற்றி தரட்டும்

அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவர். இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இலங்கைக்கான நோர்வேயின் சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர்.

நம்பிக்கைகள் ஆரோக்கியமானதாயினும் அவை அவநம்பிக்கைகளாக மாறும்போது அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

எனவே நம்பிக்கைகளை வெளியிடும்போது அவை ஓரளவேனும் சாத்தியப்படக் கூடியதாக இருப்பது கட்டாயமானதாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை செயலிழந்து போயுள்ள நிலையிலும் நோர்வேயின் விடா முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை எந்தத் தரப்பால் எந்த இடத்தில் மீறப்பட்டுள்ளது என்பதை கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ளது.

அவை குறித்த தரப்புக்களால் ஏதேனும் காரணங்களோடு மறுதலிக்கப்படக் கூடியதாயினும்,

தனது ஆய்வுக்கெட்டிய ஆதாரங்களோடு இந்தத் தரப்பு இந்த இடத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கைகளை மீறியுள்ளது என்பதே கண்காணிப்புக் குழு முன்வைத்துள்ளது.

கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் யுத்தநிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்பு பட்ட இருதரப்புமே யுத்தநிறுத்த மீறலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதில் எது சரி; எது பிழை என்ற வாதங்களை ஒருபுறம்நீக்கிவிட்டு நோர்வேயின் அனுசரணையுடன் 2002 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை இருதரப்பாலும் மீறப்பட்டுள்ளதாயின்,

அதனை மீண்டும் அமுல்படுத்த முடியும் என நோர்வே நம்புகிறதா? என்ற கேள்வி எழுவது நியாயமே.

உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இருதரப்புமே அதனை முறையாகக் கடைப்பிடிக்கவில்லை என்ற குற்றஞ்சாட்டின் அடிப்படையில், மீளவும் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் அதீதமாகச் செயற்படும் நோர்வேயிடம் புதிய திட்டங்கள் ஏதேனும் இருப்பது அவசியமாகும்.

அவ்வாறில்லாமல் 2002 இல் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதன் ஊடாக சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது என நோர்வே கருதுமாயின்,

அதற்கான சில சீராக்கங்கள் செய்தாகவேண்டும். அதாவது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் பொதுமக்களின் போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்ட ஏ-9பாதை மீளவும் பாவனைக்காக அனுமதிக்கப்பட வேண்டும்.

அதேபோல் சம்பூர்ப் பிரதேசத்தை ஏற்கனவே யார் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்களோ அவர்களிடம் அதனை ஒப்படைத்தாக வேண்டும். இவை சரிவரச் செய்து முடிக்கின்றபோது சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியமாகும்.

அவை ஒன்றும் சாத்தியமில்லை. இப்போதைக்குப் பேசுவோம் இருதரப்பையும் நோர்வே கேட்டுக் கொண்டாலும் அது சாத்தியப்படப் போவதில்லை என்பது தெளிவு.

எதுவாயினும் இணைத்தலைமை நாடுகளின் பாணியில் அன்றி அரசும் விடுதலைப்புலிகளும் பேசுவது என்ற நம்பிக்கையை மட்டும் வெளியிட்டுள்ள பௌயரின் முயற்சி வெற்றி பெறட்டும்.

# கிளிநொச்சிக்குச் சென்ற பௌயர் மீண்டும் அரச தரப்பினருடன் சந்திப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினார்.

சமாதானப் பேச்சுத் தொடர்பில் அரசாங்க முக்கிய யோசனைகளுடன் சென்ற பௌயர், விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்து பேசினார்.

முற்பகல் 11.45 மணிக்கு விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் ஆரம்பமான இச் சந்திப்பு ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் ப.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வேத் தரப்பில் பௌயருடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்சன் பிறட்ஸ்கரும் கலந்து கொண்டார்.

அரசின் யோசனைகளை விடுதலைப்புலிகளுக்குத் தெரியப்படுத்திய பௌயர், விடுதலைப்புலிகளின் பதில் யோசனைகளுடன் கொழும்பு சென்று அரசாங்கத்திடம் கையளித்தார்.

அரச பேச்சுவார்த்தைக்குழுவினர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நேற்று மாலை சந்தித்த பௌயர் விடுதலைப் புலிகளின் யோசனைகளை தெரியப்படுத்தினார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற இச் சந்திப்பில் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்னவும் கலந்து கொண்டார். (ச–5)

# உணவகங்களுக்கான பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகப் பிரிவு உட்பட்ட உணவகங்கள், குளிர்பான நிலையங்கள் ஆகியவற்றுக்கு இரண்டாம் கட்டமாக உற்பத்தியின் அளவுக்கேற்ப உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

யாழ்.அரச அதிபரினால் தற்போது 340 மூடை அரிசி, 100 மூடை சீனி, 80 மூடை பருப்பு ஆகியன மேற்படி உணவகங்கள் மற்றும் குளிர்பான நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இப்பொருட்களை உணவக மற்றும் குளிர்பான நிலைய உரிமையாளர்கள் வணிகர் கழகத்தின் சிபார்சு கடிதத்தைப் பெற்று அதனை யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (ச–133)

# வலிந்த தாக்குதல்கள் தொடருமானால்...

நோர்வேத் தூதுவரும் எங்களிடம் முன்வைத்தார். பின்வருவன அரசாங்கத்தின் நிலைப்பாடாகத் தெரிவிக்கப்பட்டன.

- ☆ *சர்வதேச சமூகத்தினது குறிப்பாக இணைத்தலைமை நாடுகளினது வேண்டுகோளை தாங்கள் ஏற்றுக் கொண் டிருப்பதாகவும்,*
- ☆ *நிபந்தனையற்ற வகையில் இரு தரப்பும் சந்திப்பதற்கும்,*
- ☆ *மோதல்களை நிறுத்துவதற்கும்,*

தாங்களும் தயாராகவிருப்பதான ஒரு நிலைப்பாடு அரசாங்கத்திடம் இருக்கிறது என்று கூறினார்களே தவிர அரசாங்கத்திடமிருந்து எந்த உத்தரவாதங்களும் எங்களுக்கத் தரப்படவில்லை.

ஆகவே நாங்கள் கூறியிருக்கிறோம். எமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்தை நம்பித்தான் நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அரசாங்கத்தை நம்பியல்ல.

சர்வதேச சமூகத்தினது முயற்சிக்கு இறுதி சந்தர்ப்பமாக எங்களது இணக்கப்பாட்டை ஏற்கனவே தெரிவித்திருந்தோம். எனவே இது சீர்குலையுமா? சீர்குலையாதா? என்பது எங்களைப் பொறுத்தது அல்ல. அரசாங்கத்தையும் இராணுவத்தையும் பொறுத்தது.

நிபந்தனைகள் குறித்து எதுவும் எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. அரசாங்கப் பேச்சாளர், அமைச்சர் மற்றும் ஜனாபதி மகிந்த ராஜபக்ஷ ஒவ்வொரும் ஒவ்வொரு விதமான கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

நோர்வோத் தரப்பினர் எம்மிடம் கூறியது என்னவெனில், உத்தியோக பூர்வமாக நாங்கள் உங்களிடம் பரிமாறிக் கொள்கின்ற விடயங்கள்தான் உண்மையானவையே தவிர ஊடகங்கள் மற்றும் அமைச்சர்கள் நாளுக்கு நாள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் ஆகியவற்றை வைத்து நீங்கள் எந்தவொரு முடிவையும் எடுக்க வேண்டாம்.

அனுசரணையாளர் என்ற வகையில் எங்களின் ஊடாக பரிமாறப்படுகின்ற விடயங்களை மட்டுமே வைத்துக் கொண்டு முடிபெடுங்கள் என்று அவர்கள் (இன்று) ஒருகோரிக்கை விடுத்துள்ளனர்.

## விடுதலைப்புலிகள் தெரிவித்தவை

சமரச முயற்சிகளுக்கு நாங்கள் தயார்-யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கிறோம் என்று அரசாங்கம் கூறிக் கொண்டு அதற்கு விரோதமாக எமது மக்கள் மீது பாரிய யுத்தத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

எங்கள் மக்களை படுகொலை செய்வது, இடம்பெயரச் செய்ய வைப்பது, காணாமல் போகச் செய்தல் மற்றும் எமது தாயகத்தை ஆக்கிரமித்தல் என்ற வகையில் ஒரு முழுஅளவிலான யுத்தத்தையே அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விரிவாக விளக்கியிருக்கிறோம்.

இன்றைய சந்திப்பில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம்.

ஒட்டுமொத்தமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கை குறித்து நாங்கள் நோர்வேத் தரப்பினருக்கு வலியுறுத்தியிருக்கிறோம். இருதரப்பினரும் சந்தித்துப் பேசும் போது நீங்கள் இதனை வலியுறுத்துங்கள் என்று நோர்வேத் தரப்பினர் எம்மிடம் கூறியுள்ளனர்.

அண்மையில் இணைத் தலைமை நாடுகள் கூடி இரு தரப்பினரும் சந்தித்துப் பேச வேண்டும் என்றும் தாக்குதல்களைநிறுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தன. சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை மதித்து எங்களுடைய தலைமைப்பீடம் எமது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது.

இருப்பினும் இராணுவத்தினர் எமது மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர்.

போக்குவரத்துப் பாதையை மூடியுள்ளனர். ஏ-9 பாதையை மூடி பல இலட்சம் மக்கள் உணவின்றித் தவிக்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றனர். பொருளாதாரத் தடையை உருவாக்கியிருக்கின்றனர்.

இப்படியாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் முற்றாக மதிக்கவில்லை. கண்காணிப்புக் குழுவினரது நடவடிக்கையையும் கூட முடக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

## யுத்தத்தை ஏவினால் சமாதானத்திலிருந்து விலகல்

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளை நாங்கள் ஏற்றுக் கொண்டு எங்கள் இணக்கப்பாட்டைத் தெரிவித்துத்துள்ளோம். ஆனால் இராணுவம் தொடர்ந்தும் வலிந்த தாக்குதல்களை செய்து எங்களுடைய பிரதேசங்களைக் கைப்பற்றும் நடவடிக்கையை தொடர்வார்களேயானால் நிச்சியமாக இனி நாங்கள் சமரச முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடக் கூடிய வாய்ப்பு இருக்காது. பகிரங்கமாகவே அறிவித்து விட்டு எங்களுடைய தாயகப் பிரதேசத்திலிருந்து இந்த ஆக்கிரமிப்பு இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கான முழு அளவிலான நடவடிக்கைக்குள் நாங்கள்இறங்குவோம். அது தவிக்க முடியாததாகவிருக்கும் என்பதைத் தெரிவித்துள்ளோம் என்றார்.

பத்திரிகைகள் உண்மை நிலைகளை வெளிப்படுத்தாதவாறு ஊடகங்களை அச்சுறுத்துவதும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதும் கடத்துவதும் படுகொலைசெய்வதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தினது ஒரு படுபயங்கரமான மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொண்டுதான் அண்மைக் காலத்தில் அறிக்கைகளின் ஊடாக அரசைக் கண்டித்துக் கொண்டிருக்கின்றன.


## அவலத்துக்கான தீர்வு

எமது தாயகப் பிரதேசத்தில் மிகப் பெரிய மனித அவலம் நடந்துகொண்டிருக்கிறது. மனிதப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், பொதுமக்கள் மீதான குண்டு வீச்சுக்கள், இடப்பெயர்வுகள், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான பாதை மூடப்பட்டு அங்கேஒரு பெரிய உணவு நெருக்கடியை ஏற்படுத்தி பட்டினிச் சாவு நிலைக்குப்பல மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்படியான ஒரு ஒட்டுமொத்தமான அவலத்தை எங்கள் தேசத்தின்மீது திணித்திருக்கின்றனர். எங்களுடைய மக்கள் நிச்சியமாக ஒன்று திரண்டு இராணுவத்தினருடைய இந்த ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக முறியடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் இருக்கின்றோம்.

இந்நிலை இன்று முழு அளவில் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் யுத்தம் மூலம் தீர்வு என்று அவர்கள் சொன்னால் பகிரங்கமாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்தும் சமாதான முயற்சிகளிலிருந்தும் விலகிக் கொள்வதாக அறிவிக்க வேண்டும்.நாங்களும் முழுஅளவிலான எங்களது நடவடிக்கைக ளை விரிவாகச் செய்வோம். எங்கள் முழு மக்களும் அதற்குத் தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

எங்கள் உரிமைகளுக்காக நாங்கள் யாரிடமும் இரந்து நிற்க முடியாது. எங்களது உரிமையை நாங்கள் போராடித்தான் பெற வேண்டும். எங்கள் மக்களும் அந்த நிலைக்கு முழுமையாகத் தள்ளப்பட்டுள்ளனர் என்றார் தமிழ்ச்செல்வன்.(ச–5)




நேற்று கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் பேச்சில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திடீர் இராஜினாமா

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கலாநிதி எஸ்.ரவீந்திரநாத் திடீரென பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா தொடர்பாக இவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கலை கலாசார துறை பீடாதிபதி பாலசுகுமார் கடந்த சனிக்கிழமை இரவு மட்டக்களப்பு நகருக்கு வெளியே உள்ள தனது வீட்டிலிருந்து அடையாளம் தெரியாத ஆட்களினால் கடத்தப்பட்டுள்ளதாகவும் அவரை விடுவிப்பதற்காகவும் மற்றும் அழுத்தம் காரணமாகவே துணைவேந்தர் தனது இராஜினாமாவை சமர்ப்பித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை உப வேந்தரின் பதவி விலகலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை என குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார். (ச)

# கடத்தப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக இனந்தெரியாதவர்கள் என்று கருதப்படுபவர்களினால் கடத்தப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்கக்கோரி அவர்களது உறவினர்கள் இன்று கொழும்பில் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இலங்கை நவசம சமாஜக்கட்சியின் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான விக்கிரபாகு கருணாரட்ண தலைமையில் காணாமல் போனோரைத் தேடி அறியும் குழு நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதுவரை காணாமல் போனோரில் சிங்கள இனத்தவர்கள் உள்ளிட்ட சுமார் 24 பேரின் விபரங்களை இதுவரை திரட்டியிருப்பதாகவும் இதுபோன்ற மேலும் பல விபரங்களை திரட்டி சாத்வீக வழியில் அவர்களை விடுவிப்பதற்கான வழிகளில் போராட இருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இங்கு வந்திருந்த கடத்தப்பட்ட நபர்களின் உறவினர்கள் பத்திரிகையாளர்களிடம் தமக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிர்க்கதி நிலை பற்றி உருக்கமாக எடுத்துக்கூறினார். (ச)

# தேவையான பொருள்கள் இன்மையால் வேலைகளை மேற்கொள்ள முடியவில்லை

## மாநகர ஆணையாளர் கவலை

யாழ்.மாநகர சபை ஆணையாளர் பதவியை ஏற்றதும் சில முக்கிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முயற்சித்த போதிலும் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக அவற்றை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் சரவணபவ கவலை தெரிவித்தார்.

முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானத்தால் அத்திபாரக்கல் நாட்டப்பட்ட நல்லூர் செங்குந்த சந்தையின் நவீன மாடிக் கட்டடத்தொகுதியின் இரண்டாம் கட்ட வேலையின் முதற்படியாக அத்திபாரத்தை கட்டி முடிக்க முடியும். யாழ்.போதனா வைத்திய சாலை முன் புறத்தில் நடைபாதைக்கு கம்பி வேலிகளை அமைக்கமேற்கொண்ட முயற்சிகள் நாட்டின் சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து தடையால் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-133)

# பிரான்ஸ் நிறுவன மருத்துவர்கள் மந்திகையிலிருந்து வெளியேறினர்

யாழ்ப்பாணத்திலிருந்து எம்.எஸ்.எஃப் என்ற பிரான்ஸ் நிறுவன மருத்துவ வல்லுநர்கள் மூவரை வெளியேற்றியுள்ளனர்.

வடமராட்சி பருத்தித்துறை மந்திகை மருத்துவமனையில் பணியாற்றிய மூவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வெளியேற்றப்பட்ட மருத்துவக்குழுவினர் சிறார் மருத்துவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய வெளியேற்றத்தால் 17 மருத்துவர்கள் தேவைப்படக்கூடிய மந்திகை மருத்துவ மனையில் ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே இருப்பதாக மருத்துவ ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளதாகவும் அம் மருத்துவர்களின் சேவை அளப்பரியது என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## முருங்கன் பொலிஸ் நிலையம்...

லப்பட்டார். 2 குடும்பஸ்தர் மற்றும் 2 இளம் பெண்கள் படுகாயமடைந் துள்ளனர். அப்பகுதியில் மேலதிகமான பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினர் மற் றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த 4 பொதுமக்களும் முருங்கன் மாவட்ட மருத்துவமனையில் காலை 6 மணியளவில் அனுமதிக்கப்பட்டனர். இத் தாக்குதலையடுத்து பொலிஸ் நிலையத்திற்கு அருகே கட்டுமானப் பணிக்காக வந்து தங்கியிருந்த 10 சிங்களவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியதாகக்கூறப்படுவோர் சிங்களவர்கள் தங்கியிருந்த கட்டடத்தின் மேல் இருந்து நடத்தியதால் இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதவேளை பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்தியநிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## பளை ,பூநகரிப்...

புலிகள் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் 11.30 மணி முதல் 12.20 மணிவரை மூன்று முறை கிபீர் விமானங்கள் இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை இரவு பளைப் பகுதிகளில் இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளை பல்குழல் உந்துகணைத் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல் மூலம் இராணுவத்தினர் அழித்து நிர்மூலமாக்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# குடும்பஸ்தரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மந்துவிலில் கடந்த மாதம் 26 ஆம் திகதி வர்ணபூச்சு வேலைக்காகச் சென்றவரை இதுவரை காணவில்லையென யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மந்துவில் வடக்கைச் சேர்ந்த கதிரவேலு தவநாயகம் (வயது 29) என்ற குடும்பஸ்தரையே காணவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

## அரசு-விடுதலைப்புலிகளுக்கிடையில்...

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இரண்டு தினங்கள் யோசனையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் இருப்பதனால் இம் மாதம் 30 ஆம் திகதி அல்லது நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பேச்சுவார்த்தையில் ஈடுபடத்தயார் என ஜனாதிபதி கூறியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தரப்பினருடன் ஒக்டோபர் இறுதியில் ஒஸ்லோவில் பேச்சுக்கள் நடத்தத்தயாராக இருப்பதாக நோர்வே சிறப்புத்தூதுவரிடம் தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது,

இதனை அரசாங்கம் வரவேற்றுள்ளது.

ஒஸ்லோவில் 28 முதல் 30 வரை பேச்சு வார்த்தை நடாத்த புலிகள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருடனான ஜோன் ஹான்ஸான் பௌயரின் சந்திப்பிற்குப் பின்னர்,பெயர்வெளியிட விரும்பாத வட்டாரங்கள் தெரிவித்தாக றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)




## எரிபொருள் விநியோக...

இதேவேளை வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் விநியோகிக்கப்படாத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குரிய ,எரிபொருள் விநியோக அட்டைக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் பெற்றுக்கொள்ளலாம் இம்முறை பெற்றோல் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அடுத்த விநியோகத்தின்போது முன்னுரிமை வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.பெற்றோல் வழங்கும் நிரப்பு நிலையங்கள் வருமாறு;

| பிரதேச செயலர் பிரிவு | எரிபொருள் நிரப்பு நிலையம் |
|---|---|
| 1.யாழ்ப்பாணம் | யாழ்ப்பாண ப.நோ.கூ.சங்கம் |
| 2.நல்லூர் | i.குகன் எ.பொ.நி.நிலையம் திருநெல்வேலி<br>ii.திரு.திருமதி.ஜெயதேவா. எ.பொ.நி.நிலையம் |
| 3.உடுவில் /தெல்லிப்பழை | என்.எஸ்.நாகலிங்கம் மைந்தர்களும்.எ.பொ. நி.நிலையம்,சுன்னாகம் |
| 4.சங்கானை | சங்கானை ப.நோ.கூ.சங்கம் |
| 5.சண்டிலிப்பாய் | மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் |
| 6.கரவெட்டி | கட்டைவேலி/நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் |
| 7.பருத்தித்துறை/ மருதங்கேணி | புலோலி ப.நோ.கூ.சங்கம் |
| 8.கோப்பாய் | கோப்பாய் எ.பொ.நி.நிலையம்/அச்சுவேலி எ.பொ.நி.நிலையம் |
| 9.சாவகச்சேரி | சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் |
| 10.தீவகம் | வேலணை ப.நோ.கூ.சங்கம் |

(ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.? இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.